53/4

தமிழர் திருமணம்

அன்றும் - இன்றும்



புலவர் அருணா பொன்னுசாமி எம்.ஏ.,

மன்றல்விழா பரிசுநூல்





மணமகன்
திருவளர்செல்வன்
அ.பொ.பாலாஜி

மணமகள்
திருவளர்செல்வி
து.கற்பகம்

மண நாள் : 09.09.2002 திங்கள்

மண இடம் : பிரேம் மகால், கரூர்.

ஒருமன தாயினர் தோழி - இந்தத்
திருமண மக்கள் என்றும் வாழி!

இங்ஙனம்,

அருணா பொன்னுசாமி
அ.முத்துலட்சுமி
அன்னை மருந்து மொத்த வாணிகம்
7, அண்ணா நகர், கரூர்-2.

O.P.T. அ.துரைராஜ்
அ.தனலட்சுமி
ஓம் பராசக்தி டெக்ஸ்டைல்ஸ்,
19-C,வேலம்மாள் லே அவுட், கரூர்.

தமிழர் திருமணம்

அன்றும் - இன்றும்



புலவர் அருணா பொன்னுசாமி எம்.ஏ.,

வெளியீடு :

திரு.வி.க. மன்றம், 7, அண்ணாநகர், கரூர்-2

திருக்குறள் பேரவை, ஜவகர் கடைத்தெரு, கரூர்-1



மதிப்புரை

K.C. பழனிசாமி
தி.மு.க. தலைமை நிலைய சொத்துப்பாதுகாப்புக்குழு

புலவர் அருணா பொன்னுசாமி அவர்கள் தனது மகள் திருமண விழாவில் திருக்குறள் நூலைப் பரிசாக அளித்து மகிழ்ந்தார். இன்றைய தினம் அவரது மகன் திருமண விழாவில் "தமிழர் திருமணம் அன்றும் இன்றும்" எனும் நூலை வழங்குகின்றார். திருமண விழாவில் இதுபோன்ற நூல்களைப் பரிசாக வழங்குவதை நான் ஆதரிக்கின்றேன், வரவேற்கின்றேன்.

சங்க காலத்தில் இருந்து தமிழர்கள் காதலையும் வீரத்தையும் போற்றி வந்துள்ளனர். தமிழர் திருமண முறைகள் எப்படியெல்லாம் மாறி வந்துள்ளன. திருமணம் எனும் சடங்கு ஏன் ஏற்பட்டது என்பதையெல்லாம் சிலப்பதிகாரம், நற்றிணை, குறுந்தொகை போன்ற நூல்களிலிருந்து எடுத்துக்காட்டி இந்நூலை நண்பர் புலவர் அருணா பொன்னுசாமி அவர்கள் நல்லமுறையில் எழுதியுள்ளார். அவர் மயிலம் தமிழ்க்கல்லூரியில் முறையாகத் தமிழ்ப்பயின்றவர் என்பதற்கானத் தடயங்களை இந்நூலில் நிரம்பக் காண முடிந்தது. பாராட்டுகின்றேன்.

இங்ஙனம்
K.C. பழனிசாமி



சிறப்புரை

வாசுகி முருகேசன் Ex.M.L.A.,
தி.மு.க. மாவட்டச் செயலாளர், கரூர்.

இலக்கிய வளம் நிரம்பிய தொன்மையான மொழிக்குச் சொந்தக்காரர்களான தமிழர்கள் வாழ்வியல் நெறியில் உயர்ந்த கொள்கை உடையவர்களாக வாழ்ந்துள்ளனர். காதல் வாழ்க்கையில் களவு கற்பு வாழ்க்கையில் தமிழர்கள் தொன்று தொட்டு ஒரு நெறிமுறையை பின்பற்றியுள்ளனர்.

தமிழர் திருமணம் இரண்டாயிரம் ஆண்டுகளில் எப்படி மாறியுள்ளது, ஏன் மாறியது என்பதையெல்லாம் என் உடன்பிறப்பு, கரூர் மாவட்டத் தி.மு.க. இலக்கிய அணித் தலைவர் புலவர் அருணா பொன்னுசாமி அவர்கள் தனது ஆய்வின் மூலம் இந்நூலில் திறம்பட எழுதிக் காட்டியுள்ளார். கற்றவர்கள் தாங்கள் ஆய்வின் மூலம் கண்டறிந்த கருத்துக்களை இதுபோன்ற நூல்கள் வழி எழுதி அனைவரும் பயன்பெறச் செய்ய வேண்டும். அந்தப்பணியைப் புலவர் மிக நேர்த்தியாகச் செய்துள்ளார். அவரது முயற்சியைப் பாராட்டிப் போற்றுகின்றேன்.

இங்ஙனம்
வாசுகி முருகேசன்.



கருத்துரை

K.V. ராமசாமி Ex.M.L.A.,
தலைவர், கரூர் நகர் மன்றம்.

சுமார் 2000-ம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் திருமணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் விரும்பி அவர்களாக சென்று குடும்பம் நடத்துவார்கள். அதன்பிறகு தந்தை பெரியார் தோன்றி தமிழகத்தில் அவருடைய சீரிய முயற்சியினால் சீர்திருத்த திருமணங்கள் 40 சதவீதம் நடந்தேறியது. அதன்பிறகு அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி போன்றவர்கள் ஒன்று சேர்ந்து தமிழகத்தில் சீர்திருத்த திருமணங்கள் நடைபெற பெறும் முயற்சிகள் மேற்கொண்டார்கள். தற்போது தமிழர் திருமணங்கள் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டு சுற்றம் சூழ ஆடம்பரமாக நடைபெறுகிறது. இந்நிலை மாறி இரு குடும்பத்தில் உள்ளவர்கள் மட்டும் ஒன்று கூடி திருமணங்கள் மிக எளிமையாக நடைபெற வேண்டும். அப்பொழுதுதான் இந்த சமுதாயமும் நாடும் முன்னேற்றம் அடையும் என்பது எனது கருத்தாகும்.

இப்படிக்கு
K.V. ராமசாமி Ex.M.L.A.,
நகர் மன்றத் தலைவர், கரூர்



ஆசிரியர் உரை

புலவர் **அருணா பொன்னுசாமி** எம்.ஏ.,
திரு.வி.க. மன்றம், கரூர்.

தமிழர்கள் தங்களது வாழ்வியல் நெறிகளை உயர்ந்த கோட்பாட்டுடன் வகுத்துள்ளனர். தமிழ்மொழியில் நீதி நூல்கள் உள்ளது போல் வேற்று மொழிகளில் காண முடியாது. வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற குறிக்கோள் உடைய தமிழர்கள் களவு கற்பு வாழ்க்கையைக் கண்டனர். அகம், புறம் என வாழ்க்கையைப் பகுத்தனர். தமிழர் வாழ்வில் திருமண முறைகள் பலவாறாக மாறியும் திரிந்தும் உள்ளன. இத்திருமண முறைகளை, இவற்றின் உண்மையைத் தமிழர்கள் அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே இச்சிறு நூலை ஆக்கினேன்.

பொதுவாகப் படிக்கும் பழக்கம் வெகுவாகக் குறைந்துவிட்ட நிலையில் படிக்கின்ற எழுதுகின்ற பழக்கத்தை விடாமல் தொடர்ச்சியாகப் பின்பற்றி வருகின்ற தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் அடிச்சுவட்டில் தமிழ் இளைஞர்கள் பீடுநடை போட்டு தமிழினத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்பது என் அவா.

திருமண நிகழ்வுகளைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் இச்சிறு நூலில் ஒரேயடியாகத் தந்திட யான் முயலவில்லை. திருமண நாளில் நிகழ்கின்ற முறைகள், அதற்கான காரணங்கள், விளக்கங்கள் அனைத்தையும் தமிழர் திருமணம் அன்றும், இன்றும் இரண்டாம் பாகத்தில் எழுதி வெளியிட உள்ளேன்.

இந்நூலை என்மகன் செல்வன் பாலாஜி இனியன் செல்வி கற்பகம் திருமண விழாவில், திருமண நாள் பரிசாக வழங்குவதில் பெருமைப் படுகின்றேன். இந்நூல் வெளிவர பெரிதும் உதவிய திரு. மேலை பழனியப்பன் அவர்களுக்கும், திரு.சி.சுப்பிரமணியம் ஆசிரியர், புலவர் திரு. பெ. கறுப்பண்ணன், செல்வி புலவர் பெ.கலாராணி ஆகியோருக்கும் நன்றியுடையேன்.

எனது நூல் வெளியீட்டு இலக்கியப் பணிகளுக்குத் துணை நின்று ஊக்குவிக்கின்ற திருவாளர் கே.சி.பி. அவர்களும் சகோதரி வாசுகி முருகேசன் அவர்களும் இந்நூலிற்கு மதிப்புரையும் சிறப்புரையும் வழங்கி என்னைப் பெருமைப்படுத்தி உள்ளனர். அவர்கட்கு என்றும் நன்றிக் கடப்பாடுடையேன். மிக விரைவில் அச்சியற்றிக் கொடுத்த ஸ்ரீ விஷ்ணு கிராபிக்ஸ் உரிமையாளர் அவர்களுக்கும் என்றும் நன்றி.

இந்நூல் வெளிவரத் தூண்டுகோலாகத் துலங்கிய தமிழகத் தமிழாசிரியர் கழகத் தலைவர் என் உடன் பிறந்த சகோதரர் புலவர் சு.நஞ்சப்பன் அவர்கட்குக் கடப்பாடுடையேன்.

இங்ஙனம்

அருணா பொன்னுசாமி

பொருளடக்கம்

நுழைவாயில்

உலகிடை பல்லாயிரக்கணக்கான உயிர்களின் தோற்றமும் வளர்ச்சியும் வாழ்வியல் முறைகளும் பெரும் வியப்பை அளிக்கவல்லன. ஓரறிவு உயிர்முதல் ஆறறிவாகிய பகுத்தறிவின் ஆளுகைக்குட்பட்ட மாந்தன் வரை தம் வாழ்வியல் நெறிமுறைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தம் வளர்ச்சிக்கேற்ப மாற்றியும் புதுக்கியும் சிலவற்றைப் புதியவனவாக விரும்பி ஏற்றும் விலக்கியும் வந்துள்ளதை மனிதக் கூட்டம் நடந்துவந்த கால் சுவடிகளை ஆய்வோருக்கு நன்கு புலனாகும்.

காலத்திற்கேற்ற கோலம் என்பது ஏற்கத்தக்கதே. இதனை உணர்ந்த நன்னூல் ஆசான் பவணந்தி முனிவர் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே" என்று கூறிப் போந்தார்.

இந்நூற்பா இலக்கண விதிமுறைகட்கு மட்டுமின்றி வாழ்வியல் இலக்கண முறைகளுக்கும் பொருந்துவனவே ஆகும்.

தமிழர் வாழ்வியலை அகம் புறம் என்று இரு கூறாக்கி இலக்கணமும் இலக்கியமும் கண்டனர்.

சங்ககாலந்தொட்டு தமிழர்கள் வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோளுடன் வாழத் தலைப்பட்டனர். வாழ்க்கையென்பது அறத்தின் சார்புடையதாக அமையவும் அமைக்கவும் முற்பட்டனர். அதனாலேயே ஒத்த அன்புடைய ஒருத்தியை மணந்து வாழ்வதை இல்லறம் என்றும், வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்னும் நோக்குடன் துறவு பூணுவதைத் துறவறம் என்றும் பகுத்தனர். இல்லம் ஆகட்டும் இல்லத்தைத்துறந்து காடுமலை சென்று கடுந்தவம் புரிபவர் ஆகட்டும் இவ்விரு பக்கத்திலும் அறம், தலை சிறந்து நிற்க வேண்டும் என்று தமிழர் கருதினர்.

ஆகவேதான் இவ்விரு சொற்களிலும் அறம் இணைந்து நின்றது.

இல்லறம், துறவறம் ஆகிய இரண்டையும் பேசும் திருக்குறள் இல்லறமே நல்லறம் என்று பேசுவதைக் காணமுடிகின்றது.

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து" (குறள் 48)

என்றும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்." (குறள் 50)

என்றும் குறள் கூறுவதைக் காண்க.

தானும் அறத்தோடு நின்று தன்னைச்சார்ந்தவர்களையும் அறவழியில் இணைத்து வாழும் வாழ்க்கை தவசிகளின் நோன்பைவிடப்பயன்தர வல்லது என்றும், வாழவேண்டிய நெறிப்படி உலகில் வாழ்பவன் வானுலகத் தெய்வமாகவே இங்கு போற்றப்படுவான் என்றும் திருவள்ளுவர் கருதினார்.

இயல்பாகவே அந்நாளில் இல்லறத்தையும் துறவறத்தையும் விரும்பி மேற்கொண்டனர். சேரன் செங்குட்டுவன் இல்லறம் மேற்கொண்டான். அவன் தம்பி இளங்கோ துறவு வாழ்க்கையைத் தாமே முன்வந்து மேற்கொண்டு தமிழர்களின் தனிப்பெருங்காப்பியமாகியசிலப்பதிகாரத்தைப் படைத்தளித்தார். கானல்வரிப் பாடலால் கோவலன்பால் சினந்த மாதவி தானும் துறவியாகி மகள் மணிமேகலையும் துறவு பூணச் செய்தமையால் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய மணிமேகலை எனும் நூலை மதுரைக்கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் படைத்தார்.

சமணத் துறவிகள் வழங்கிய பெருங்கொடைகளாகிய தமிழ் இலக்கண இலக்கிய நூற்கள் தமிழன்னையை அழகுபடுத்துவதை இன்றும் போற்றி மகிழ முடிகின்றது. என்றாலும் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள், "துறவறத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை, இயற்கைக்கு மாறுபட்டு யாரும் வாழ முடியாது" என்று கூறியதற்கிணங்க தமிழ்ச் சமுதாயம் இல்லறத்திலேயே அதிக நாட்டம் கொண்டது.



உடன்போக்கு

பால்உணர்வு தூண்டப்பெற்ற ஆணும் பெண்ணும் இனக்கவர்ச்சிக்கு அடிமையாகி இருவரும் ஒருமித்த கருத்துடையராகி இணைந்து வாழ முற்பட்டனர். அன்பின் பிணைப்பால் கட்டுண்ட ஆணும் பெண்ணும் பெற்றோரையும் உற்றோரையும் ஊராரையும் புறந்தள்ளி இவர்களின் எதிர்ப்பையும் மீறி ஒருங்கிணைந்து வாழும் மன உறுதி பூண்டனர். இங்ஙனம் ஒருமித்த கருத்துடைய ஆணும் பெண்ணும் தோழியோ நண்பனோ உதவிட வீட்டைவிட்டு வெளியேறி கண்காணா இடத்திற்குச் சென்று வாழ்ந்திட முனைந்தனர். இதனை அகப்பொருள் இலக்கண நூலார் "உடன்போக்கு" என்றழைத்தனர். இந்த உடன் போக்கு நிகழ்வுதான் திருமணத்தின் முதற்படியாகும். வீட்டைவிட்டு வெளியேறத் துணியும் பெண்ணைக் காதலனிடம் ஒப்படைக்கும் தோழி, என்றும் அன்பு பாராட்டி வாழ்க, எந்நிலையினும் இவளைப் பிரியாதே என்று கூறி தலைவியின் இரு கைகளையும் தலைவனது கைகளில் வைத்து சொல்வாள். இதனை "ஓம்படை" என்று கூறுவர்.

இங்ஙனமாகச் சென்றவர்கள் தாங்களே மணமுடித்துக்கொள்வதும் உண்டு. அன்றி பெற்றோர் தேடிவந்து திருமணம் கூட்டுவிப்பதும் உண்டு.



திருமணம் ஏன்?

ஒத்த அன்புள்ள ஒருவனும், ஒருத்தியும் தாமே உடன்போக்கு மேற்கொள்வதையும் திருமணம் புரிந்து கொள்வதையும் தொல்காப்பியம்,

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலையான"

தொல்-கற்பியல்-141

என்று கூறுகிறது. கொடுப்போரும் அடுப்போரும் இன்றி ஆணும் பெண்ணும் களவும் கற்பும் மேற்கொள்வதில் நாளடைவில் பொய் சொல்லுதலும் தவறும் நிகழத் தொடங்கின.

தமிழர்கள் வாழ்க்கையை அன்பும் அறனும் சார்ந்த ஒன்றாக எண்ணினர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" - 45

என்பது திருக்குறள்.

அறவழியினின்றும் மாறுபட்டு அன்புக்கு ஊறு விளைவதைக் கண்ட சமுதாயப் பெரியோர்கள் அன்பால் பிணைக்கப்பட்டோர், தாமாக உடன்போக்கு, செல்லக்கூடாது. பெற்றோர் எதிர்த்தாலும் ஊர்ப்பெரிவர்களிடம் கூறித் திருமணம் மேற்கொள்ளவேண்டுமென்ற வரையறையை ஏற்படுத்தினர்.

நெடுநாள் பழகிய ஒருவன் அந்தப்பெண் திருமணத்தைப் பற்றி பேசுங்காலை உன்னுடன் நான் காதல் கொள்ளவில்லை என்று மறுமொழி கூறினான். அந்தப்பெண் இந்த வழக்கை ஊர்ச்சபையில் முறையிடுகின்றாள். என்னுடைய இந்த வழக்கில் அவனே நீதிபதி அவன் சொல்வதுதான் தீர்ப்பு. காரணம் நானும் அவனும் பழகுங்காலை இதனை அறிந்து இன்று என்சார்பில் பேசும் சாட்சியங்கள் எதுவுமில்லை. நாங்கள் நித்தம் நேரில் பகற்குறி இரவுக்குறி என இடமும் நேரமும் ஒதுக்கி சந்திப்போம். ஆனால்

அப்படி சந்தித்துப் பேசுவதைக்கண்ட ஒரே சாட்சி இருக்கிறது. ஆனால் அந்த சாட்சியும் சபைக்கு வராது. ஒரே ஒரு கொக்கு நாங்கள் சந்திக்கும் இடத்தினுள்ள ஓடையில் ஓடுமீன் ஓடி உறுமின் வருவதை நோக்கிக் காத்துக் கொண்டிருந்தது.

என்னை மணந்து கொள்வதாக கையுறை தந்து இனிக்கப் பேசியவன் மாறிவிட்டான் என்று முறையிடுவதாக குறுந்தொகையில் அகச்சான்று உள்ளது.

"யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யான்எவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்குங்
குருகும் உண்டு தாம் மணந்த ஞான்றே"

- குறுந்தொகை 25

இங்ஙனமாகிய வழக்குகள் சமுதாயத்தில் வரலாகாது எனக்கருதிய பெரியோர்கள் திருமணம் எனும் சடங்கைத் தோற்றுவித்தனர். இதனைத் தொல்காப்பியம் கற்பியல் 143வது நூற்பா

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

எனக் கூறுவதைக் காணமுடிகிறது. சமுதாயத்தில் பொய் சொல்லச் சிலர் தலைப்பட்டதனால் திருமணம் எனும் ஒரு முறையை சமுதாயப் பெரியோர் வகுத்தனர் என்பது இதன் பொருள். இம்முறையினாலேயே இன்றும் திருமண அழைப்பிதழில் பெரியோர்களால் உறுதி செய்த வண்ணம் இத்திருமணம் நடைபெறுகிறது என்று சுட்டுவதை நாம் உணர வேண்டும்.

இதனால் தமிழ்ச் சமுதாயம் திருமணம் எனும் நிகழ்வைக் கண்டது.



சங்க இலக்கியத்தில் திருமணம்

சங்க காலத்தில் நடைபெற்ற இரு திருமணங்கள் பற்றிய செய்திகள் அகநானூற்றில் காணக் கிடக்கின்றன.

திருமண நாளில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளைத் தன் மனைவியோடு பின்னொரு நாளில் தலைவன் சொல்லி மகிழ்வதாக அகநானூற்றில் 86வது பாடல் அமைந்துள்ளது. இப்பாடலைப் பாடியவர் புலவர் நல்லாவூர் கிழார்.

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்று அமலை நிற்ப, நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து, மாலை தொடரிக்
கனை இருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென,
உச்சிக் குடத்தர், புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்,
புதல்வற் பயந்த திதலைஅவ் வயிற்று
வால்இழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ, நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆக என
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் கம்மையர், ஞெரேரெனப் புகுதந்து,
பேர்இல் கிழத்தி ஆக எனத் தமர்தர
ஓர்இல் கூடிய உடன்புணர் கங்குல்.
கொடும்புறம் வளைஇக், கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப,.
அஞ்சினள் உயிர்த்த காலை, 'யாழ நின்
நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரை' என,
இன்நகை இருக்கை, பின்யான் வினவலின்,
செஞ்சூட்டு ஒண்குழை வண்காது துயல்வர

அகம்மலி உவகையள்ஆகி, முகன் இகுத்து,
ஒய்யென இறைஞ்சி யோளே - மாயின்
மடம்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்குஈர் ஓதி, மாஅ யோளே.

இப்பாடல் கூறும் கருத்தைப் பார்ப்போம். திருமண விருந்திற்கு உழுந்தினை நிறையச் சேர்த்து குழைய வெந்த பொங்கலுடன் மிகுந்த சோற்றினையும் கூடியிருந்தவர் தொடர்ச்சியாகவும் பந்தி பந்தியாகவும் அருந்தும் விருந்து ஓசை கேட்கிறது. வரிசையாக கால்கள் நட்டு அமைந்த பெரிய பந்தல். கீழ்த்தரையில் புதுமணலைப் பரப்பி இருந்தனர். குத்துவிளக்கை ஒருபால் ஏற்றி வைத்திருந்தனர். பந்தலில் எங்கும் பூமாலைகளைத் தொங்கவிட்டிருந்தனர்.

தீய கோள்களின் தொடர்பற்ற சந்திரனை கேடில்லாத உரோகணி வந்து சேரும் நல்லநாளில் இருள் நீங்கியும் நீங்காமலும் உள்ள அழகு மிளிரும் புலர்காலைப் பொழுது வந்தது. உச்சியில் நிறைநீர்க் குடத்தை சுமந்த மணத்தை செய்து வைக்கும் ஆரவாரமுடைய மங்கல மகளிர் கூடினர். முன்னே தருவனவும் பின்னே தருவனவும் அவர்கள் முறைமையில் தந்தனர். பிள்ளைப் பேற்றினால் அழகிய தேமலை உடைய வயிறு பொருந்திய அணிகலன் கூடிய மகளிர் நால்வர் கூடினர். கற்பினின்றும் தவறாது, நன்றாகிய பல வகைகளிலும் உதவியாக இருந்து நின்னை மனைவியாகப் பெற்ற கணவனைப் பேணும் துணைவியாக நீ ஆவாயாக! எனக்கூறி வாழ்த்தினர். பூவும் நெல்லும் கலந்த குளிர்ந்த நீரை அவள் தலையினில் தூவினர். கரிய கூந்தலில் நெல்லும் பூவும் சேர்ந்து காணக்கிடந்தன. இவ்வாறாக மங்கல நீராட்டிய பின் வதுவை நன்மணம் முடிந்தது.

சுற்றத்தார் அனைவரும் கல்லென்ற ஒலியினராய் விரைந்து வந்தனர். பெருமை மிக்க இல்லத் தலைவி ஆவாய் என்று வாழ்த்தினர். ஒரு தனி அறையில் புதிய மணமக்கள் புணர்ச்சிக்குரிய முதல் இரவு நாள். மிக்க மகிழ்ச்சியோடு தலைவன், தலைவியின் முகத்தைப் புதைத்திருந்த கைகளை மெல்லத் திறந்து, நின் உள்ளம் கருதியவனைக் கூறுக என்று வினவினான். தலைவனின் பிடியின்றும் இழுத்துக் கொண்டு பொங்கிய மகிழ்வுடன் தலை கவிழ்ந்து நின்றாள்.

சங்க காலத்தில் புலர்காலைப் பொழுதில் மங்கல மகளிர் நால்வர் கூடி நிகழ்த்திய திருமணம் மிகப்பெரிய அளவில் சமைக்கப் பெற்ற களிமிதவை அதாவது கும்மாயம் என்றழைக்கப்படும் அல்லது இற்றைநாள் உள்ள அக்காரஅடிசில் போன்றதோர் சுவையான நெய் அரிசி வெல்லம் கூட்டிய பருப்புப் பொங்கல் அதனை இடையறாது பலரும் கூடி உண்ண மங்கல மகளிர் வாழ்த்தி மணம் முடிக்கும் இப்பாடலில் பூ, நெல், புத்தாடை, பொங்கல், மனைவிளக்கு நீர்நிரம்பிய குடம் ஆகியன இடம் பெற்றுள்ளன. பந்தர் இடப்பட்டு புதுமணல் பரப்பி மலர்களால் அலங்கரித்து உள்ளனர். அன்றைய திருமணத்தில் மங்கல மடந்தையர் நால்வர் முன்னின்று திருமணத்தை நடத்தி உள்ளனர்.

அகநானூற்றில் 136வது பாடலாக அமைந்துள்ள பாடலும் அன்றைய திருமண விழாவைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இப்பாடலைப் பாடிய புலவர் விற்றூற்று மூதெயினனார். அப்பாடலைப் பார்ப்போம்.

மைப்புறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந்த தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்
சகடம் மண்டிய துகள்நீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முடிவொடு பரூஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்கணும் இமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பமல் அறுகைத்
தழங்குரல் வானின் தலைப்பெயற் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டித்
துவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றிச்
தமர்நமக் கீத்த தலைநாள் இரவின்
உவர்நீங்கு கற்பின்எம் உயிருடம் படுவி
முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇப்
பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவியர்

உறுவளி யாற்றச் சிறுவரை திறவென
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்
உறைகழி வாளின் உருவுபெயர்த் திமைப்ப
மறைதிறன் அறியா ளாகி ஒய்யென
நாணினள் இறைஞ்சி யோளே பேணி

அகநானூறு 136

பருப்புடன் கலந்து ஆக்கிய நெய்மிகுந்த வெண்சோற்றை, குறையாத ஈகைத் தன்மையுடன் உயர்ந்த சுற்றம் முதலியோர் உண்ணவும், பறவைகளின் சகுனம் இனிதாகக் கூட, அகன்றவானம் களங்கமற்று விளங்க திங்களைச் சகடம் கூடிய குற்றமற்ற நல்ல நாளில், மணவீட்டை அழகுபடுத்திக் கடவுளை வணங்கி, மண மேளத்துடன் பெரிய முரசும் முழங்க, தலைவிக்கு மணநீராட்டிய மகளிர், தம் அழகிய கண்களால் இமைக்காது நோக்கி விரைந்திடவும் மென்மையான பூவையுடைய வாகையின் இலையை அறுகம்புல்லுடன் நீலமணி போன்ற குளிர்ந்த மணக்கும் அரும்புடன் சேர்த்துக்கட்டிய வெள்ளிய நூலைச் சூட்டி தூய புத்தாடையில் பொலியச் செய்கிறார்கள் மணவோசை மிகுந்த பந்தலில் அணிகளை மிகுதியாக அணிந்ததினால் உண்டான வியர்வையை விசிறியால் ஆற்றி அவள் சுற்றத்தார் தலைவியைத் தலைவனுக்குத் தந்த முதல்நாள் இரவு.

கற்போடு திகழ்ந்து என் உயிருக்கு உடலாக உள்ள அவள், கசங்காத புதுப்போர்வையைத் தன் உடல் முழுவதும் போர்த்திக்கொண்டதால், மிகுந்த புழுக்கத்தையடைந்த பிறைபோன்ற நெற்றியில் அரும்பிய வியர்வையை மிகுந்த காற்றுப்புகுமாறு சிறிதுதிற என்று அன்புடைய நெஞ்சத்தோடு போர்வையைக் கவரவும், உறையினின்று உருவிய வாளைப்போல அவள் உருவம் வெளிப்பட்டு விளங்க அதை மறைக்கும் வகை அறியாதவளாகி, விரைந்து வெட்கத்துடன் விருப்பத்துடன் வணங்கினாள் என்பது இப்பாடலின் பொருளாகும்.

சிறப்பான விருந்தைப் படைத்து உறவினர்களும் நண்பர்களும் உண்ண மகிழ்தல். திருமணத்திற்கு நாளும் கோளும் பார்த்தல். மங்கல இசை முழக்கம். மணமக்கள் புத்தாடை அணிதல். மணமிக்க மலர்களால் அலங்கரித்தல்

ஆகியன நடைபெற்றதாகப் பண்டைத் திருமண முறை நமக்குத் தெரிவிக்கின்றன. இவ்விரு திருமணங்களிலும் மணநாளன்றே இரவில் மணமக்கள் கூட்டுவிக்கப் பெற்றுள்ளார்கள். இத்திருமணங்களில் நடைபெற்றுள்ள அனைத்தும் இன்றைய திருமணங்களிலும் நடைபெறும் மரபுகளாகவே உள்ளன. இத்திருமணங்களில் ஆரியர் மந்திரங்கள் சொல்லி பிறவேறு சடங்குகள் இயற்றுதலைக் காண முடியவில்லை. அம்மி மிதித்து அருந்ததி பார்த்து தீவலம் வருதல் போன்ற சடங்குகள் இல்லை. ஆயின் இவையனைத்தும் இடைக்காலத்தில் பிற்காலத்தில் ஆரியர் வருகைக்குப் பின்னர் வந்துள்ளன. கவிஞர் முடியரசன் அவர்கள்

மலரும் தென்றலும் மணந்திடத் தரகர்
எவரும் இல்லை, இதுவே தமிழர்
மணமுறை யாகும், மற்றைய எல்லாம்
தமிழ்மணம் அல்ல, வந்தவர் தந்தன.

என்று கூறுவதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.



ஆரியர் வருகையும் திருமண மாற்றமும்

தங்களின் பூர்விகமாகிய மத்திய ஆசியாவிலிருந்து இடம் பெயர்ந்து இமயமலையிலுள்ள கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவில் நுழைந்த ஆரியர்கள் சிந்து சமவெளிகளில் தங்களது குலத்தொழிலாகிய ஆடுமாடுகள் மேய்த்து வாழ்ந்தனர். நாளடைவில் தக்காண பீடபூமி வழியாகத் தமிழகத்தில் பிழைப்பிற்காகக் குடியேறினார்கள்.

தமிழகத்தில் ஆரியர் வருகையால் ஆட்சியிலும் கோயில்களிலும் சமுதாய செயல்பாடுகளிலும் குறிப்பாகத் திருமணங்களிலும் மந்திரங்களும் சடங்குகளும் இடம் பெற்றன.

உழைப்பே பிழைப்பு என்னும் கொள்கையால் உடன்பட்டுப்போன தமிழர்கள் விவசாயத் தொழிலையே பெரிதும் விரும்பி முதன்மைதந்து வாழ்ந்தனர் என்பதைத் திருக்குறள் கூறும்,

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

திருக்குறள் 1031

உழவுத் தொழிலுக்கு வேண்டிய ஆறு குளம் ஏரி அணைக்கட்டு ஆகியவற்றை முன்னுரிமை தந்து செய்து முடித்தனர். உலகிலேயே கல்லணைதான் முதற்முதல் கட்டப்பெற்ற அணைக்கட்டாக காணமுடிகின்றது. கரிகால் பெருவளத்தான் கல்லணையைக் கட்டி முடித்தான். உழவைப் போற்றிய தமிழர்கள் கல்லணைக்குப்பிறகு நிரம்ப நீர் நிலைகளை ஏற்படுத்தி இருக்கவேண்டும். ஆனால் ஆரியர் வருகையால் நீர்நிலை தேக்கம் செய்தலை விடுத்து கோயில் குடமுழுக்கு எனத் திசை மாறிப் போயினர். மறுமைக்குத் தேவைப்படும் அருளைத் தேடாமல் இம்மையில் இப்பிறவியில் அழியக் கூடிய சோற்றுடம்பிற்காக உழைப்பதைக் கேவலமாக ஆரியர் பேசினர். இப்பேச்சில் மயங்கிய தமிழர்கள் முற்றாக மாறி கோவில் திருப்பணிகளைத் தலைமேற்கொண்டு செய்யத் தொடங்கினர். அன்றைய நாளில் ஆட்சிக் கட்டிலில் செல்வாக்குடைய சேரசோழ பாண்டியர்களும் கோயில்களைக் கட்டும் திருப்பணிகளில் முற்பட்டனர்.

ஆரியர் தமிழகத்தில் நுழைந்ததால் ஏற்பட்ட முதல் மடை மாற்றம் இது. அடுத்ததாகத் தமிழர் வாழ்வில் திருமணம் போன்றவற்றில் சடங்குகள் தோன்றித் தமிழர்களின் திருமணத்தை நடத்தும் பொறுப்பை ஆரியர்கள் ஏற்கத் தொடங்கினர்.

தமிழகத்தில் நடைபெற்ற திருமணங்களில் கோவலன் கண்ணகி திருமணத்தில் ஆரியர் இடம்பிடித்ததை அறிய முடிகின்றது.

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பென்னை

என்பது சிலப்பாதிகார வரிகள்.

இத்தகு காண்பதற்கரிய திருமணத்தை மேற்கொண்ட கோவலன் கொலைப்பட்டதும் கண்ணகி சிலைப்பட்டதும் மாதவி மணிமேகலை துறவு மேற்கொண்டதும் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டியது பயனற்றுப்போனதை உணர்த்துகிறது.

முடியாட்சிக் காலத்தில் அரசர்களின் அன்புக்குரியர்களாக ஆரியர்கள் ஆவதற்காக அரசர்களுக்கு தங்களது குலப்பெண்களைக் கன்னிகாதானம் செய்து கொடுத்தனர். இதனால் தேவதானம் என்றும் இறையிலி என்றும் கிராமங்களை அரசர்களிடம் ஆரியர்கள் பெற்றதைக் கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றன.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரன் பல்யானைச் செல்குழு குட்டுவன் போன்ற தமிழ் அரசர்களும் சிற்றரசர்களும் ஆரியரைத் தேவராகவே கருதி தொழுது அவர் வழி செயல்பட்டனர். மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி எனும் முதுமொழிக்கிணங்க மக்களும் ஆரியர்களின் ஏவலுக்கும் வடமொழி மந்திரம் அருச்சனை போன்றவற்றிருக்கும் மிகுதியும் அடிமையாயினர். இதனால் ஆரியர் முன்நின்று திருமணச் சடங்குகளை நடத்திடத் தொடங்கினர்.



ஆரியத் திருமணத்தின் அவலம்

தமிழர் திருமண முறையில் அந்தச் சமுதாயத்தில் வாழ்ந்து பழுத்த முதியவரும் முதுசெம் பெண்டிரும் முன்னின்று திருமணத்தை நடத்தினர்.

தமிழகத்தில் வீட்டின் தலைவரை ஐயன் என்றழைக்கும் பழக்கம் இன்றும் உண்டு. கரூர், கோவை, ஈரோடு மாவட்டங்களில் இன்றும் காணலாம். ஐ என்றால் தலை. ஐயன் என்றால் தலைவன். ஜி.யூ.போப் அவர்கள் கிறித்துவராக இருந்தும், தமிழ்நாட்டில் ஐயர் எனும் சொல் மரியாதைக்குரிய சொல்லாக இருப்பதால் தனது பெயரை ஜி.யூ போப் ஐயர் என்று வைத்துக்கொண்டதைப்போல் ஆரியர்கள் நாளடைவில் தங்களை ஐயர் என்று கூறிக்கொள்ளத் தலைப்பட்டனர். அந்தணர் எனும் சொல்லும் ஆரியரைக் குறிக்கும் சொல்லன்று என்பதை சிந்திக்க வேண்டும்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" -30

என்று திருக்குறள் கூறுவதைக் காண்க.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கூறுவதைப் போன்று சமஸ்கிருதம் உலக வழக்கு ஒழிந்த பின்பு கோயில் வழிபாட்டு மொழியாகவும் சடங்கு மொழியாகவும் ஆனது.

இன்றைக்கும் ஆரியர் நடத்தும் திருமணங்களில் ஓதப்படும் மந்திரமொழியின் பொருளை மணமக்களோ பெற்றோர்களே சுற்றத்தார்களோ அறிவார்களானால் ஆரியர் முன்நின்று நிகழ்த்தும் திருமணச் சடங்கை உதறி எறிவர், சூத்திரனாகிய தமிழன் திருமணம் செய்து கொள்ள தகுதியற்றவன் என்று கூறி அவனுக்குத் தருப்பைப் புல்லில் பூணூலும் மோதிரமும் அணிவித்து இந்த மணப்பெண்ணை முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் மும்மூர்த்திகளுக்கும் எட்டுத்திக்கு பாலகர்களுக்கும் திங்களுக்கும் அக்கினி பகவானுக்கும் மனைவியாக்கி பின் அவர்கள் உனக்குத் தானமாகத் தருகிறார்கள். ஏற்றுக்கொள் என்பதுதானே மந்திரத்தின் பொருள்.

அக்கினிஓமம் ஏன் வளர்க்க வேண்டும்? இந்தியாவின் வடகோடியில் கடுங்குளிர் மிகுந்த பகுதிகளில் முந்தைய நாளில் ஆரியர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் கடுங்குளிரைப் போக்கிக்கொள்ள சுற்றி அமர்ந்து நடுவில் தீ வளர்த்தனர். தமிழ்அரசர்கள்பால் தாங்கள் செல்வாக்குப் பெற்றபின் இந்த தீ வளர்த்தலையும் திருமணச் சடங்காகக் கொண்டனர். தமிழர் நெறி, நடுகல்லையும் சிலைகளையும் பூவும் நீரும் நறுமணப் புகையும் கொண்டு வழிபடுதல் ஆகும்.

தமிழர் வழிபாட்டுப் பொருள்களாகக் குளிர்ந்த தென்னம்பாளை, இளநீர், பால், சந்தனம், தேன், தயிர், வாழை போன்றவற்றையே வீட்டிலும், கோவிலிலும் பயன்படுத்தியுள்ளனர். அக்கினி, ஓமம், வேள்வி ஆகியன தமிழர் வாழ்வியல் நெறிமுறையில் என்றும் இல்லை.

அம்மி மிதிப்பதும் தமிழ்ப் பெண்களின் தன்மான உணர்வுக்கு இழுக்கு விளைவிப்பதாகும். கவுதம முனிவரின் மனைவி அகலிகை இந்திரனால் விரும்பப்பட்டு அவனோடு புணர்ந்து கற்பிழந்தாள். இதனை நேரில் கண்ட கவுதமர் இந்திரனையும் சபித்து, அகலிகையையும் கல்லாகுமாறு சபித்தார். இந்தப் புராணக்கதையை மணமகளுக்கு நினைவூட்டவும் நீயும் இப்படி தவறு செய்தால் தண்டனை பெறுவாய் என்பதை உணர்த்தவும் அம்மிக் கல்லை மணப்பெண் மிதிக்கும் சடங்கு நடைபெறுகிறது. திருமணநாளில் மணமகள் மட்டும் கற்பு இழக்காமல் வாழ்வதற்கு உறுதிமொழி கேட்பதாக இச்சடங்கு நிகழ்வதை மனித நாகரிகம் உள்ளவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இதிலும் ஒரு வேடிக்கை என்னவென்றால் ஆரியர் திருமணத்தில் நிகழ்த்தப்படும் எந்த ஒரு சடங்கும் ஏன் செய்யப்படுகிறது? அதன் பொருள் என்ன? என்பது திருமணத்தை செய்கின்ற புரோகிதர் முதல் மணமக்கள் பெற்றோர் சுற்றத்தார் வரை யாருக்குமே அறவே தெரியாது என்பதும் நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று.

அடுத்து அக்கினி வளர்த்து அதை மணமக்கள் வளம் வருதல் எதற்காக? என்பதைப் பார்ப்போம். அக்கினி வளர்த்து ஓமகுண்டத்தில் போடப்படும் அவிர்ப்பாகம் எனப்படும் பொருள்களைப் பெறுவதற்காக இந்திரன் முதலான தேவர்கள்

வருகிறார்கள் என்பது இச்சடங்கின் பொருள். ஏற்கனவே அகலிகையிடம் தவறாக நடந்து கவுதம முனிவரால் சபிக்கப்பெற்ற இந்திரன், திருமணத்திற்கு வந்தால் அழகிய மணமகளை அவன் விட்டுவைப்பானா?

இந்திரன் முதலான தேவர்களுக்கும் இப்பெண்ணை வழங்குவதாக மந்திரம் சொல்லிவிட்டு இந்திரனையும் வரவழைத்து அகலிகையையும் நினைவூட்டும் சடங்கு எத்துணை தேவையற்றது என்பதைச் சிந்திக்க வேண்டாவா?

அடுத்து அருந்ததியைக் காட்டுவதாக ஒரு சடங்கும் உண்டு. திருமணச் சடங்கை நிறைவேற்றும் புரோகிதர் பகல் பொழுதில் மணப்பெண்ணை வானத்தை நோக்கிப் பார்க்கச் செய்து மந்திரத்தை ஓதுவார். வானத்தில் அருந்ததி பகற்பொழுதில் தெரியாத போதும் மணமகளை அருந்ததியைப் பார்த்ததாகத் தலையாட்டச் செய்வர்.

கற்புக்கரசியாகிய அருந்ததி, வானத்தில் ஒரு விண்மீனாக விளங்குகிறாள் என்பது ஒரு ஐதீகம். சப்தரிஷி மண்டலத்தை ஒட்டி வசிட்ட முனி என்னும் விண்மீனின் அருகே சிறியதொரு விண்மீனாக அருந்ததி இருப்பதாக சொல்லப்படுகிறது. இரவு நேரத்திலே கூட அருந்ததி விண்மீனைக் காண்பது கடினம் இந்நிலையில் சிலப்பதிகாரத்தில்

"கற்புக்கடம் பூண்ட இப்பத்தினித் தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"

என்று போற்றப்படும் கண்ணகியை வணங்குவதை விட்டுவிட்டு கற்பிழந்த அகலிகையை, வசிட்ட முனிவரின் அருந்ததியையும் தமிழர் திருமணத்தில் இணைப்பதை நடுநிலையாளர் ஏற்றிடமுடியாது.



சமஸ்கிருத மந்திரங்களின் பொருள்:

இன்றைய நாள்களில் கோயில்களிலும் திருமணங்களிலும் ஓதப்படும் மந்திரங்கள் சமஸ்கிருத மொழியாகும். சமஸ்கிருதம் என்ற ஒரு மொழி இல்லை. பழங்காலத்தில் பலரும் பலவிதமாகப் பேசிவந்த பல மொழிகளையும் ஒன்று சேர்த்த மொழி சமஸ்கிருதம்.

சமஸ்த்தம் + கிருதம் = சமஸ்த்கிருதம். சமஸ்த்தம் -பலவும், யாவும் என்று பொருள். கிருதம் - சேர்த்து செய்தது என்று பொருள்.

இன்றும் சரி என்றும் சரி ஆரியர்கள் சமஸ்கிருத மொழியைப் பேச்சு வழக்கில் பயன்படுத்தவில்லை. ஆரியர்களுக்கென்று ஒரு நாடோ ஒரு மொழியோ இருந்ததாகச் சான்று இல்லை. அவர்கள் வாழ்ந்த நாடு பல. இதனை விரிவாக அறிய விரும்புவோர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் எழுதிய புரட்டு இமாலயப் புரட்டு எனும் நுலைப் படித்துப் பார்க்கவும்.

ஆரியர்களின் மந்திரங்கள், அரசர்களை, செல்வர்களை அச்சுறுத்திப் பணம் பறித்திட ஏற்பட்ட முறையாகும். நாளடைவில் இம்மந்திர முறைகளை அனைவரும் பயத்தின் காரணமாக ஏற்கத்தலைப்பட்டனர்.

இனித் திருமண நாளில் ஓதப்படும் மந்திரங்கள் உணர்த்தும் பொருள் என்ன? என்பதைப் பார்ப்போம்.

புரோகிதர் தானங்களைக் கேட்பதாகவே இம்மந்திரங்கள் அமைந்துள்ளன. புஷ்பதானம் சமர்ப்பியாமி என்று கூறி பூக்களை அள்ளித்தர மணமக்கள் அதனைப் பெற்று பூக்களை அருகிலுள்ள மஞ்சள் தூளால் உருவாக்கப்பெற்ற பிள்ளையார் மீது தூவி வணங்கி சடங்குகள் தொடங்கும். கதலி சமர்ப்பியாமி என்றால் வாழைப்பபழம் வழங்குதல் இப்படியே பூதானம் சமர்ப்பியாமி என்றதும் நிலங்களைத் தானமாக வழங்குதல். இப்படி நிலங்களைப் பெற்றதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இதே போல சுவர்ணதானம் சமர்ப்பியாமி என்றதும் பொன்னைத்தானமாக வழங்க வேண்டும். நிலத்தையும் பொன்னையும் தானம் தர இயலாத நிலையில் பணத்தை முடிந்தமட்டும் தருமாறு கேட்டுப் பெற்ற பின்னர்

கன்னிகாதானம் சமர்ப்பியாமி என்று கூறியவுடன், முறைப்படி ஒரு பெண்ணைத் தானமாகப் புரோகிதருக்குக் கொடுக்க வேண்டும். ஆரியரின் நாகரிகமாகிய இதற்கும் பெண்ணிற்குப் பதிலாகப் பொருள் வழங்கப்பபெற்று பூக்களை அருகிலுள்ள மஞ்சள் தூளால் உருவாக்கப்பெற்ற பிள்ளையார் மீது தூவி வணங்கி சடங்குகள் தொடங்கும். இதன் காரணமாகவே கன்னிகாதான விவாக சுப முகூர்த்தப் பத்திரிக்கை என்றே திருமண அழைப்பிதழைக் குறிப்பிடுவதை இன்றும் காணலாம். இதிலும் விவாகம் எனும் சொல் ஒரு பெண்ணுடன் ஓடிவிடுதல் என்று பொருள்படும். கலியாணம் என்பதும் கலி என்றால் துன்பம் ஆணம் என்றால் வரவு, தொடர்ச்சி என்பதால் துன்பத்தின் தொடர்ச்சி என்று பொருள். மன்றல் என்றும் திருமணத்திற்குப் பெயர். மரத்தின் பெருத்த அடிப்பகுதிக்கு மன்று என்று பெயர். முற்காலத்தில் நிழல் தரும் பெரிய அரசமரத்தின் கீழே திருமணங்கள் நிகழ்ந்ததால் மன்றல் எனும் பெயர் வந்தது. திரு+மணம் =திருமணம் எனும் சொல்லில் திரு என்று சொல் அழகு, இலக்குமி, செல்வம், தெய்வீகம், மங்கலம், மேன்மை, சிறப்பு, சாந்தி, பொலிவு, பாக்கியம், கவர்ச்சி, விரும்பும் தன்மை, தெய்வத்தன்மை, நல்வினை, மாங்கலியம், போகபோக்கியம் எனும் பதினாறு பொருள்களும் தரும் இனிய அடைமொழிச் சொல்லாகும்.

மணம் எனும் சொல் மண் என்ற சொல்லிலிருந்து தோன்றியது. மணம் எனும் சொல் மகிழ்ச்சி, கூட்டம், நன்னிலை, சேர்க்கை, வாசனை, புகழ், மணத்தல் எனும் பொருள் தரவல்லது. ஆதலின் இவ்விரு சொல்லும் கூடி இருவரும் கூடும் திருமணம் ஆயிற்று.

மூவகைத் திருமணங்கள்

அந்நாளில் ஒரு பெண்ணைப் பெற்றோர் தர கொள்ளும் கொடைமணம் இருந்தது. ஒத்த அன்புள்ளம் கொண்டோர் உடன்போக்கு மேற்கொள்ளும் காதல்மணம் இருந்தது. வன்முறையில் ஒரு பெண்ணைக் கவர்ந்து சென்று கொள்கின்ற கவர்வு மணமும் இருந்தது.

தமிழர் திருமணத்தை ஐந்திணை, பெருந்திணை, கைக்கிளை என மூவகைப் படுத்தினர்.

ஐந்திணை என்பது அன்புடைக் காதல். அன்பின் வயப்பட்டு ஒத்த உருவும் திருவும் கல்வியும் பொருந்திய வயதும் கூடியோர் கொள்ளும் திருமணம்.

பெருந்திணை என்பது பொருந்தாக்காதல். பொருத்தமில்லா இருவர் மணக்கும் திருமணம் அன்புடையதாயினும் ஏற்க இயலாது. பொருத்தம் என்பது உருவப் பொருத்தம், கல்விப் பொருத்தம், முறைப் பொருத்தம், தொழிற்பொருத்தம், வயதுமுறை பொருத்தம் ஆகியவற்றைக் குறிக்கும்.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

- தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் 25

என வரும் பத்துப் பொருத்தத்தைக் காண்க.

கைக்கிளை என்பது ஒரு தலைக்காதல். பெருமையில்லாத தலைமக்கள் உறவு. கை என்றால் சிறுமை. கிளை என்றால் உறவு. சிறுமையாகிய உறவு என்று பொருள் கணவன் மனைவியாக வாழலாம். ஆனால் இருவரிடத்தும் ஒற்றுமையான அன்பு இன்றி ஒருவர் அன்பு பாராட்டி மற்றொருவர் பிறிது இடத்தில் அன்பு காட்டி வாழும் வாழ்க்கை. இது சிறப்பில்லாத வாழ்வு.

அந்தணர் அருமறை மன்றல் எட்டு என்று இறையனார் அகப்பொருள் கூறும். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன தமிழர்கள் ஒதுக்கிட வெண்டிய ஆரியர் திருமண முறைகள்.

தமிழர் வாழ்வியல் முறைகள்

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"
- தொல்காப்பியம், பொருள் கற்பு 1

பெண்ணைக் கொடுப்பதற்குரிய உரிமை படைத்த பெண்ணின் பெற்றோர் அப்பெண்ணை மணந்து கொள்ள இசைவு பெற்ற அல்லது உரிமையுள்ள தலைவன் சில சடங்குகளைச் செய்து ஏற்றுக் கொள்வதே திருமணமாகிய சடங்கு என்பது இதன் பொருள்.

எங்கோ பிறந்து வளர்ந்த ஒரு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர், வாழ்க்கைத் துணை என்ற உறுதியை ஏற்ற பின்னர் அன்பு, அறம், நேர்மை, உழைப்பு, விட்டுக் கொடுத்தல், தியாகம் என்னும் உணர்வுகள் ததும்ப மேற்கொள்ளப்படும் இல்லற வாழ்வைவிட உலகில் மேம்பட்ட வாழ்க்கை இல்லை. இதனையே திருவள்ளுவர்,

இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. எனக்கூறி போந்தார்.

இல்வாழ்க்கையில் அன்பு முதலிடம் வகிக்கிறது. இதை உணர்ந்தவர்கள் அன்பே கடவுள் என்று கூறி மகிழ்ந்தனர். அறம் என்றால் என்ன? திருவள்ளுவர் கூறும் அறம். மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன். மனத்துக்கண் குற்ற மற்றவனாக இருத்தல் என்பதே அறம்.

இல்லறத்தில் ஈடுபடும் ஆணாக இருந்தாலும் சரி. பெண்ணாக இருந்தாலும் சரி. இருவருக்கும் குறைந்தளவு பண்பு நலன்கள் வரையறுக்கப்பெற்றுள்ளன. ஆண், அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி ஆகிய நான்கு பண்புகள் பெற்றிருத்தல் வேண்டும். அறிவு என்பது எப்பொருளாயினும் உண்மையை உணரும் ஆற்றலே அறிவு. காப்பன காத்து கடிவன கடிந்து ஒழுகும், ஒழுக்கம், நிறை எனப்படும். ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தலே ஓர்ப்பு எனப்படும். கொண்டது மறவாமை கடைப்பிடி எனப்படும்.

பெண்ணிற்குரிய குணநலன்கள் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு எனும் நான்கு. அஞ்சுவதற்கு அஞ்சுவது அச்சம் எனப்படும். பழி

பாவங்களுக்கு விலகுதல் நாணம் எனப்படும். மடம் என்பது கொளுத்தது கொண்டு கொண்டது விடாமை. பயிலாத பொருளிடத்து அருவருப்பு கொண்டு நிற்கும் நிலை பயிர்ப்பு எனப்படும்.

இத்தகு பண்புநலன் மிகுந்த ஆணும் பெண்ணும்

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"

குறுந்தொகை 40

எனும் பாடலுக்கிணங்க முந்தைய உறவு முறை ஏதுவுமின்றி முன்பின் அறிமுகம் எதுவுமின்றி மழைநீரானது அது விழும் நிலத்தின் தன்மைக்கேற்ப இருத்தல் போல ஒன்றுபட்ட ஒருவனும் ஒருத்தியும்

"இம்மை மாறி மறுமை எய்தினும்
நீயா கியர்எம் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே"

எனும் நற்றிணைப் பாடலுக்கேற்ப அன்பின் திறத்தால் இப்பிறவியில் மட்டுமின்றி எப்பிறவியினும் நின் இதயத்தில் இருப்பவள் நானே என்று பெண் பெருமிதம் கொண்டு வாழ்வதே வாழ்க்கை.

தலைவன் தலைவி அன்பு எத்தகையது பாருங்கள்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

குறுந்தொகை 3

"வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுநம் என்னும் செருக்கு."

திருக்குறள் 1193

காதலரால் விரும்பப்பெறும் காதலிக்குச் சேர்ந்து வாழ்வோம் எனும் பெருமிதம் ஏற்றதாகும். அத்தகு பெருமித வாழ்வே இல்லறமென்னும் நல்லறமாகும். திருமண வாழ்க்கையில் தேய்பிறை இல்லை. வளர்பிறையே.

இல்லற வாழ்வில் வயது கூடக் கூட அன்பும் அதிகமாகும். இருபதில் இருக்கும் அன்பும் தலைவனைப் பாராட்டும் பண்பும் எழுபதிலும் தலைவியிடம் எப்படி இருக்கும், இருக்க வேண்டும் என்பதைப் பாரதிதாசன் குடும்ப விளக்கில் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார்.

அறம் செய்த கையும் ஓயும்
மக்களை அன்பால் தூக்கிப்
புறம்போன காலும் ஓயும்!
செந்தமிழ்ப் புலவர் சொல்லின்
திறம்கேட்ட காதும் ஓயும்!
செயல்கண்ட கண்ணும் ஓயும்!
மறவரைச் சுமக்கும் என்றன்
மனமட்டும் ஓய்த லில்லை.

தலைவிக்கு அன்பில் வாழ்வியல் பண்பில் தலைவன் சளைத்தவன் அல்ல. தன் மனைவியைப் பற்றி கூறுவதை பாருங்கள்.

புதுமலர் அல்ல, காய்ந்த
புற்கட்டே அவள் உடம்பு!
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும் மூதாட்டி!
மதியல்ல முகம்அவட்கு
வறள்நிலம்! குழிகள் கண்கள்!
எதுஎனக் கின்பம் நல்கும்?
இருக்கின்றாள் என்ப தொன்றே!

இதுதான் இனிய இல்லறம்.

தமிழர் திருமணத்தில் மட்டுமன்று, வாழ்வியலிலும் அன்பைப் போற்றி அறவறி நின்று புகழுடன் வாழ்தலையே வாழ்வாகக் கருதினர்.

கல்விக்கு முதலிடம் தந்தனர். பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே

என்று கூறுவதில் இருந்தும்,

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே

என்று கூறுவதில் இருந்தும்

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

திருக்குறள் 400

என்னும் திருக்குறளின்படியும் பண்டைத் தமிழர் கல்விக்கு மிக முக்கிய இடம் தந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

இல்லறத்தில் ஈடுபடுவோர் பொதுமை நோக்கு மிளிர்ந்திட வாழ்ந்தனர். பிறர் பசித்திருக்க உண்ணமாட்டார். புகழைப் பெறுவதே வாழ்வதன் நோக்கம் எனக்கொண்டனர். இதனைக் கீழ்க்காணும் புறநானூற்று 182 வது பாடல் அரண் செய்து நிற்கும்.

உண்டால் அம்மஇவ் உலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே

இப்பாடலில் தந்நலமற்ற பொதுநலம் பூத்துக் குலுங்குவதைக் காண முடிகிறது. உலகம் உண்ண உண்ணுகின்ற நெறி தமிழர் நெறி.

இவ்விருந்தோம்பலை பேணிக் காத்திடவே இல்லறம் மேற்கொண்டனர். புகழுக்காக உயிரை மாய்க்கவும் அணியமாக இருந்தனர். பழிபாவத்திற்கு அஞ்சினர். பிறர்க்காக வாழத் தலைப்பட்டனர்.

இல்லறத்தில் ஈடுபடுவோரிடத்து கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை. நடுவுநிலைமை, அழுக்காறமை அவா இன்மை ஆகிய கட்டமை ஒழுக்கம் குடியிருத்தல் வேண்டும்.

அன்பையே, தமிழர் வாழ்க்கை நெறியாகவும், முறையாகவும் கொண்டு வாழ்ந்தனர், வீழ்ந்தனர். பொருள், வாழ்க்கைத் தேவைக் கேற்ப ஈட்டலே அறமெனக் கொண்டு ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் நெறியில் நின்றனர். சங்க இலக்கியத்தில் மேற்கோள் செய்யுள் ஒன்று காணப்படுகிறது. அப்பாடலில் மகளிரின் செம்மாந்த நிலை, கணவனுடன் கூடி வாழும் வாழ்வின் பெருமை பளிச்சிடுகிறது.

ஒரு தலைவியின் பெற்றோர் இல்லம் செல்வச் செழிப்புடையது. பனைமரத்தையே நுகத்தடியாகக் கொண்டு யானைகளைப் பூட்டி உழுது வெள்ளித் துண்டுகளை விதைத்திடப் பொன்னாக விளைகின்றது. இருப்பினும் பிறந்த வீட்டின் வாழ்வைப், பெருமையை பெண் விரும்பவில்லை. கணவனது வாழ்வில் வறுமை குடிகொண்டிருந்தாலும் அந்த வாழ்க்கையையே விரும்புகின்றேன் என்பதாக அப்பாடல் வருகின்றது.

இராமழை பெய்த ஈர ஈரத்துள்
பனைநுகங் கொண்டு யானையேர் பூட்டி
வெள்ளி விதைத்துப் பொன்னே விளையினும்
வேண்டேன் பிறந்தகத் தீண்டிய வாழ்வே
செங்கேழ் வரகுப் பசுங்கதிர் கொய்து
கன்று காத்துக் குன்றில் உணக்கி
ஊடுபதர் போக்கிமுன் உதவினோர்க் குதவிக்
காடுகழி இந்தனம் பாடுபார்த் தெடுத்துக்
குப்பைக் கீரை உப்பின்றி வெந்ததை
இரவல் தாலம் பரிவுடன் வாங்கிச்
சோறது கொண்டு பீறல் அடைத்தே
ஒன்றுவிட் டொருநாள் தின்று கிடப்பினும்
நன்றே தோழிநம் கணவன் வாழ்வே.

இதுதான் அன்றைய மகளிரின் வாழ்வியல் நெறி. ஒரு பெண், கணவனின் உழைப்பால் வாழ்வதே இல்லறம் எனக் கொண்டனர்.

தலைமுறை மாற்றம்

தமிழர்களின் இதயத்தில் தன்மானச் சுடர்விளக்கை ஏற்றிவைத்த பகுத்தறிவுப் பகலவன் ஈரோட்டுப் பெரியாரின் தொண்டினால் உறங்கிக்கிடந்த தமிழினம் விழித்தெழுந்தது.

வாழ்க்கையிலும் திருமணங்களிலும் தேவையற்ற சடங்குகள் தேவையில்லை என்பதை உணர்ந்து திருமணங்களில் ஆரியர்களை விலக்கித் தமிழர் திருமணங்கள் தமிழ்நாடு எங்கும் 1955 முதல் 1980 வரையிலான ஆண்டுகளில் நடைபெற்றன. எங்கு நோக்கினாலும் ஆரியப் புரோகிதத்தை ஒதுக்கிய திருமணங்கள். திருச்சி மாவட்டம் தாத்தையங்கார்பேட்டையில் ஒரு நெசவாளியாக வாழ்க்கையைத் தொடங்கி அரிய பொதுப்பணியை ஆற்றிய திருவாளர் மு.பெ.முத்துக்கருப்பன், மேட்டுப்பாளையம் பழநியப்பன், தாத்தையங்கார் பேட்டை மகாமணி ஆகியோருடன் நானும் நண்பர் திரு. தொ.முத்துசாமி ஆசிரியரும் நூற்றுக்கணக்கான திருமணங்களை நடத்தி உள்ளோம். இத்தகு திருமணங்கள் பல்கிப் பெருகியதால் 1967 இல் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த தன்னேரில்லாத தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் சீர்திருத்த திருமணங்களைச் சட்டப்படி செல்லுபடியாகுமென சட்டத்தையே இயற்றினார்கள்.

திராவிடர் கழகத்தினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் இத்தகு ஆரியப் புரோகிதம் ஒழிந்த திருமணங்களைச் சலிக்காது ஆர்வமுடன் முன்னின்று செய்து மகிழ்ந்து தமிழினத்தை விழிப்புறச்செய்தனர்.

தந்தை பெரியாரின் ஓய்விலாத பிரச்சாரம் தமிழர்களின் செவியைத் தொட்டது. தமிழர்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர். ஆரியப் புரோகிதத்தைத் தவிர்த்தே என் திருமணம் நடைபெற்றது. துறையூர் தமிழாசிரியர் நண்பர் திரு. அரங்க நாராயணசாமி அவர்களும் என்னுடன் பயின்ற ஒருசாலை மாணாக்கராகிய மகாதேவி புலவர் மு.சின்னசாமி போன்றோர் நாளும் கோளும் பார்த்தலை நீக்கி விட்டு தமிழர் திருமணத்தைத் தயங்காது செய்து கொண்டனர். இராகு, காலத்திலேயே திருமணங்கள் நடத்தப்பெற்றன. இவர்கள் எல்லாம் இன்றைக்குக்கும் மக்களோடு மகிழ்ந்து எடுத்துக்காட்டான வாழ்வையே கொண்டுள்ளனர்.

ஆனால் தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் நல்லாட்சிக்குப் பிறகு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் பிற மாநில தெய்வ வழிபாடுகள் பெருகியது. போலியான தெய்வ பக்தி தோன்றியது. தெய்வ வழிபாட்டால் பணக்காரர் ஆகக் கனவு கண்டு கோயில்களைத் தேடி அலைந்தனர். புத்தி வந்தால் பக்தி போய்விடும். பக்தி வந்தால் புத்தி போய்விடும் எனும் பெரியாரின் பொன்மொழிக்கேற்ப போலி பக்தி இன்று நாடெங்கும் பரவி தமிழர்கள் தன்மானத்தை இழந்து நிற்கின்றார்கள்.

தமிழர் திருமணத்தை முன்னின்று நடத்திய சான்றோர்களே கூட இன்று தங்களது இல்லத் திருமணங்களைப் புரோகிதச் சடங்குடன் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை ஒளிவுமறைவின்றி வெட்கத்துடன் ஒத்துக்கொள்ளவேண்டும்.

மறைந்த பெரியவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் ஒன்றை அடிக்கடி கூறுவார்கள். ஒருவன் ஒன்றுமே தெரியாதவனாக இருப்பது தவறில்லை. ஆனால் ஒன்றுமே தெரியாமல் எல்லாம் தமக்குத் தெரிந்ததுபோல் பேசுவதும்,நடப்பதுவும்தான் இன்றைய தினம் நாட்டில் ஏற்பட்டுள்ள நலிவுகளுக்குக் காரணம் என்றார். இன்று அதுதான் நடந்து கொண்டு இருக்கின்றது.

செல்வநிலையில் முன்னிலை பெற்றவர்கள் சமுதாய நிலைகளில் அனைத்துத்துறைகளிலும் தங்கட்குத் தலைமையும் முதன்மையும் எதிர்பார்க்கத் தொடங்கி உள்ளனர். பணம் சேர்த்துவிட்டால் அவர்களைப் புத்திசாலிகளாகவும் சமுதாயம் கருதவேண்டும் எனக் கருதுகின்றனர். இதனால் கல்வியாளர்கள் ஒதுங்கி நிற்கவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது. பண்டைநாளில் நாடாண்ட அரசர்களும் கற்றறிந்த புலவர்களின் வழிகாட்டுதலில் நடந்ததைப் புறநானூறு எடுத்துக்காட்டும்.

கல்வி பெறாதது ஒரு குற்றமன்று. கல்வி பெறாதவர்கள் கற்றவர்கள் சொல்வதைக் கேட்கவேண்டும். இதனையே திருவள்ளுவர், கற்றிலன் ஆயினும் கேட்க, என்று கூறினார். இதனினும் ஒரு படி மேலே போய் திருவள்ளுவரே மேலும் கூறுகையில்,

கல்லாதவரும் நனிநல்லார் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின் - 403

எனக் குறிப்பிடுகின்றார். அவையில் கற்றவர்கள் முன்னால் கல்வி அறிவில்லாதவர்கள் கருத்துக்கூற முன் வரக்கூடாது. ஏனெனில்

கல்லாதான் ஒட்பும் கழிய நன்றாயினும்
கொள்ளார் அறிவுடை யார் - 404

என்று மேலும் திருவள்ளுவர் கூறுவதைக் காணலாம். இதனால் கல்லாதவர்கள் இழிந்தவர்கள் என்று கொள்ள இடமில்லை. கற்றவர்களுக்கு முதலிடம் தந்து அவர்கள் அடக்கம் காத்திட முயலவேண்டும்.

இந்நாளில் கற்றவர்களில் அறுபது சதவிகிதத்தினர் கற்றாங்கு ஒழுகாமலும், சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாகவாழாமலும் உள்ளனர். தந்நல முதன்மையாளர்களாகவும், தன்னினப் பகைவர்களாகவும் காட்டிக்கொடுப்போராகவும் கற்றாருள் சிலர் தருக்கித் திரிகின்றனர். அதுவும் இற்றை நாள் சமுதாய பண்பாட்டு சறுக்கல்களுக்குக் காரணம் ஆகும். இதனால் கல்லாதவர் ஆதிக்கம் சமுதாயத்தில் நிலைபெறுகிறது.

வரலாற்றுப்பார்வையில் தமிழர்களுக்குப் பெருமை இருப்பதுபோலவே சிறுமையும் உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

என்றைக்கும் தமிழர்கள் அன்பிற்குக் கட்டுண்டதைவிட அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுள்ளனர். தமிழர்களுக்குச் சான்றளித்த பாரதியார்

அச்சமும் நாணமும் அடிமைச் சிறுமதியும்
உச்சத்தில் கொண்டாரடி! - கிளியே!
ஊமைச் சனங்களடி!

என்று கூறிப் போந்தர். இந்நிலை மாறிட வேண்டும்.

இந்நிலையை மாற்றிட தற்பொழுது தமிழகத் தமிழாசிரியர் கழகமும், திருக்குறள் பேரவையும் முன்னின்று பல நல்ல பணிகளை ஆற்றி வருகின்றன.

திருவள்ளுவர் தவச்சாலை புலவர் இரா. இளங்குமரனார், சிலம்பொலி செல்லப்பனார், தென்னிலை வழக்கறிஞர் கோவிந்தன், தமிழகத் தமிழாசிரியர் கழக மாநிலத் தலைவர் புலவர் சு.நஞ்சப்பன்

போன்ற நல்ல தமிழறிஞர்களும் என்போன்ற புலவர் பெருமக்களும் இன்றும் குறள்வழித் திருமணங்களை நாடெங்கும் நடத்தி வருகின்றனர். இக்குறளாயத் திருமண முறை நாடெங்கும் நிலை பெற்றிட வேண்டும்.

உறவுமுறை: சொல்லும் பொருளும்:

உயர்தனிச் செம்மொழியாகிய தமிழில் பொருளற்ற சொற்கள் ஏதுமில்லை. இதனாலேயே எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று தமிழ் இலக்கண நூலார் கண்டனர்.

நெடிதான இல்லற வாழ்வில் மூழ்கித் திளைத்தவர்களும் தங்கள் வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தும் உறவு முறைச் சொற்களாகிய அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, தங்கை, சம்பந்தி, மருமகன், மருமகள், பேரன், பேத்தி ஆகிய சொற்கள் உணர்த்தும் பொருள் நீர்மை உணராதவர்களாகவே உள்ளனர்.

தாய் என்னும் சொல் ஆய், ஆயி, எனும் சொல்லிருந்து உருவானது ஆகும். ஆய், ஆயி என்னும் சொல்லுக்கு ஆயி, ஆகி, ஆக்கி, உருவாக்கி கருவாக்கி, தாங்கியவள், காப்பாற்றியவள் என்று பொருள். தாய் என்றால் தாங்கியவள் உயிரைக் கருவைத் தாங்கியவள் என்று பொருள். அப்பன், கருவிற்கு மூலமான விந்துவை அப்பியவன் என்று பொருள். தம்+அப்பன் =தமப்பன் ஆகி தகப்பன் என்றாகியது. தாஎன்னும் வேர்ச் சொல்லிலிருந்து தந்தை எனும் சொல் உண்டாகி தன்னைத் தந்தவன் தந்தை என்று வந்துவிட்டது. என்பாரும் உளர். அதுபோலவே உயிரினங்கள் மாடுகள் அம்மா என்றழைக்கும். உறவு முறையில் இயற்கையாக உருவான ஒரு சொல் அம்மா என்பதாகும். அண்ணன் என்றால் மேலானவன், நெருக்கமானவன் என்று பொருள். தன்+பின் என்ற சொல் தன்பி என்றாகி தம்பி என்று வந்தது. தனக்குப் பிறகு வந்தவன் தம்பி ஆனான். தம்+கை என்பதே தங்கை தமக்கு + ஐ என்பதை தமக்கை என்று வந்தன. கை என்றால் உதவி உறவு என்று பொருள். தனக்கு உதவியாக உறவாக இருப்பவள் எனும் பொருள்களில் தங்கை தோன்றியது. ஐ என்றால் தலைவி, மூத்தவள் என்பது பொருள். தமக்கு மூத்தவள் என்பதே தமக்கை எனும் சொல்லாகத் தோன்றியது. சம்+பந்தி என்றால் சம்=நல்ல, பந்தம் என்றால் உறவு நல்ல உறவு உள்ளவர் எனும் பொருளில் சம்பந்தி என்ற சொல்உருவானது. இதனை இன்று சம்மந்தி என்றழைக்கின்றனர். சம் என்றால் நல்ல என்றும் மந்தி என்றால் குரங்கு என்றும்

பொருள்படும். சம்மந்தி என்று அழைக்கும் தவறான சொல் பொருளில் நல்ல குரங்கு என்று பொருளின் நீர்மை மாறுபடுதலை உணரவேண்டும்.

மரு+மகன், மரு+மகள் எனும் சொற்களையும் தவறாகவே சிலர் புரிந்து கொண்டு மரு என்ற சொல்லிற்கும் மறு என்ற சொல்லிற்கும் பொருள் அறியாது இன்னொரு மகன் போன்றவர் எனத் திரித்துப் பொருள் கொள்கின்றனர். மரு என்றால் மணம், புகழ் என்று பொருள். குடும்பத்தாருக்கு மணம் சேர்க்கப் புகழ் சேர்க்க வந்தவர் என்று பொருள் படும். தாய் தந்தையரின் பெற்றோராகிய தாத்தா பாட்டி ஆகியோரின் பெயரைத் தாங்கியவன், பெயரைக் காப்பாற்ற வந்தவர்கள் பெயரன், பெயர்த்தி ஆவார். இச்சொற்களே பேரன், பேத்தி எனத் திரிந்து மருவியது.

இன்றைய நிலையில் திருமணங்கள்

அன்புக்குப் பொருள் சொல்லி உறவுக்குக் கைக்கொடுத்த திருமணங்கள் இன்று பொருளையே பெரிதென எண்ணி திசைமாறிப் போய் தனது சந்ததியினர் பொருளால் பூத்து விளங்கினால் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டன. வாழ்க்கைக்குப் பொருள் தேவைதான். ஆனால் பொருளாகிய செல்வம் மட்டுமே வாழ்க்கையாகி விடாது. உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் நின்று நிலைத்துவிட்ட காந்தியடிகளை எண்ணிப் பாருங்கள். அரண்மனை வாழ்வைத் துறந்து வெளியே வந்த புத்தரையும், இளங்கோவடிகளையும் பாருங்கள்.

அறிவால் ஒரு நாடு மேம்படும். ஒரு குடும்பம் தழைக்கும். அறிவற்ற ஒரு நாடோ, வீடோ பொருளால் தலைதூக்கியதாக வரலாறு இல்லை. அன்புக்குப் பொருள் சொன்ன தெரசா அன்னையும் ஒரு தாஜ்மகாலும் உள்ள நாடு இது. பொருளே உலகில் பெரிது என வியந்த உலக வல்லரசு நாடாகிய அமெரிக்காவின் ஈ, எறும்பு நெருங்காத பெண்டகன் இராணுவக் கிடங்கு ஒரு பின்லேடனால் காணாமல் போய் இருக்கிறது. பொருளால் உயர்ந்த அமெரிக்கா இன்று உலக நாடுகள் முன் வெட்கித் தலை குனிந்து நிற்கிறது.

அன்பு நிற்கும், அறிவு வெல்லும். பொருள் அழியும், உடல் அழியும், இளமை அழியும் என்பதை உணர்ந்தால் இல்லறம் நல்லறமாக நிற்கும்.

பண்பாட்டு நிலைக்களனாகக் குடும்பத்தை உருவாக்கி சிறந்த ஆளுமைப் பண்புடைய மக்களை உருவாக்குவதே இல்லறத்தின் இனிய நோக்கமாகும். ஆனால் இன்று நாடெங்கும் திரைப்பட நாகரிகத்தால் வேகமாகப் பண்பாட்டை இழந்து மனித நேயத்தைத் தொலைத்து எதற்காக வாழ்க்கை என்பதையே மறந்து குறிக்கோள் இல்லாத சரியான வழிகாட்டுதல் இல்லாத வாழ்வாக இன்றைய நடைமுறை வாழ்வியல் பொய்மைத் தோற்றத்துடன் மிளிர்கிறது. உதவி என்பது இல்லாமல் தந்நலம் மிகுந்து நானே எனும் செருக்குத் தலைமை தாங்குகிறது.

ஆடம்பர வாழ்க்கையும், ஆங்கில வழிக் கல்வியும் இந்தியத் திருநாட்டை ஒருபோதும் தூக்கி நிறுத்திவிடமுடியாது.

வ.உ.சியின் தியாகமும், திருப்பூர் குமரனின் துணிவும், தில்லையாடி வள்ளியம்மையின் நெஞ்சுரமும், பாரதி, பாரதிதாசனின் கவிதையும், காமராசரின் தந்நலமற்ற தூய சேவையும், திரு.வி.க. பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சாற்றலும் இந்த நாட்டிற்கு வழிகாட்டி கீழ்த்தட்டு மக்களை உயர்த்திவிட்டிருக்கின்றது.

ஆங்கிலவழி நடை உடை மொழி மோகத்தை முற்றாகத் தவிர்த்துத் தன்மானத் தமிழர்களாக வாழத் தலைப்படும் நாளே தமிழகத்தில் இல்லறம் செழிக்கும் நாளாகும்.

வணிக நோக்கில், வியாபாரப் பொருளாக மணமகன், மணமகள் இருப்பதை ஒழிக்க வேண்டும். நாட்டிற்கும், வீட்டிற்கும் புகழ் சேர்ப்பவர்களாக மணமக்கள் திகழ வேண்டும். பொய்மைச் சடங்குகள் நீக்கப்படவேண்டும். சங்க காலத் தமிழரின் வாழ்வியல் நாகரிக நெறிகள் பூத்துக்குலுங்க வேண்டும்.

மலர்மாலைகளை அணிந்துள்ள மணமக்கள் அந்த மலர்களைப் போலவே தங்களது பேச்சில் செயலில் மென்மையைக் காட்டி மணந்து நிற்க வேண்டும்.

வாழையடி வாழையாக இல்லறம் செழிக்க உற்றார் உறவினருடன் விருந்தோம்பி அன்பு பாராட்டி மகிழ்ந்து வாழவேண்டும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரின் இரக்க உணர்வும் ஈகைத்திறமும் இல்லறத்தை நல்லறமாக்கும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

திருக்குறள் 50

இந்நூல் எழுத பயன்பட்ட மேற்கோள் நூல்கள்:

1. தொல்காப்பியம் பொருள்
2. இறையனார் அகப்பொருள்
3. சிலப்பதிகாரம்
4. திருக்குறள்
5. நன்னூல்
6. நம்பியகப்பொருள்
7. குறுந்தொகை
8. அகநானூறு
9. கலித்தொகை
10. பொருள்மொழிக்காஞ்சி
11. முடியரசன் கவிதைகள்
12. சுயமரியாதைத் திருமணம் ஏன் - ஈ.வெ.ரா.
13. புரட்டு இமாயலப்புரட்டு - ஈ.வெ.ரா.
14. பாரதிதாசன் குடும்ப விளக்கு
15. தமிழர் திருமணம் - ஞா.தேவநேயப் பாவாணர்
16. தமிழர் திருமணமும் இனமானமும் - பேராசிரியர் டாக்டர் க.அன்பழகன்.
17. மதுரைத் தமிழ்ப் பேரகராதி - முதல்பாகம்
18 மதுரைத் தமிழப் பேரகராதி - இரண்டாம்பாகம்
19. இல்வாழ்க்கை - டாக்டர் மா.இராசமாணிக்கனார்
20. நீதிக்களஞ்சியம்
21. மங்கல மனையறம் - மதுரை இளங்குமரனார்
22. துறைமுகம் - கவிஞர் சுரதா
23. பெண்மை வெல்க - புலவர் அருணா பொன்னுசாமி
24. பாரதியார் கவிதைகள்



திருமண வாழ்த்து

மணமக்கள் :

அ.பொ.பாலாஜி - து.கற்பகம்

கற்ற நல் அறிவினொடும்
கருத்துஅறி மனைவியொடும்
முற்றநல் மகவினொடும்
முழுதுநாள் இனிது வாழி!

வ.சுப.மாணிக்கம்.

அன்புடன்



நூல்பதிப்பாசிரியர்

பாக்கனி. மேலை.பழனியப்பன்

செயலர், கரூர் மாவட்டத் திருக்குறள் பேரவை
செயலர், கரூர் மாவட்ட மருந்து வணிகர் சங்கம்
செயலர், கரூர் மாவட்ட நகரத்தார் சங்கம்
இணைச்செயலர், மாவட்டத் தி.மு.க.இலக்கிய அணி

ஸ்ரீ விஷ்ணு கிராபிக்ஸ், கரூர். போன்: 260076, 263102.